www.Padasalai.Net www.TrbTnpsc.com

Vnr11Eco

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

-----

வகுப்பு 11

காலஅளவு: 3.00 மணிநேரம் **பொருளியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்:** **20×1=20**

1) நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர்
அ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஆ) ஆடம் ஸ்மித்
இ) இலயன்ஸ் ராபின்ஸ் ஈ) பால் அ சாமுவேல்சன்

2) பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?
அ) விலைக் கோட்பாடு ஆ) வருமானக் கோட்பாடு
இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு ஈ) வணிகக் கோட்பாடு

3) சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது ...............
அ) தரவரிசை ஆய்வு ஆ) இயல்பெண் ஆய்வு
இ) பண்பளவை ஆய்வு ஈ) உளவியல் ஆய்வு

4) கொடுக்கப்பட்ட தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல் கீழ்க்கண்டவாறு அழைக்கப்படுகிறது.
அ) தேவை விரிவு மற்றும் சுருக்கம் ஆ) தேவை இடப்பெயர்வு
இ) தேவை கூடுதல் மற்றும் குறைதல் ஈ) மேற்காண் அனைத்தும்

5) முதன்மை உற்பத்திக் காரணிகளாவன
அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு ஆ) உழைப்பு மற்றும் மூலதனம்
இ) நிலம் மற்றும் மூலதனம் ஈ) நிலம் மற்றும் உழைப்பு

6) ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது கிடைக்கும் உற்பத்தி
அ) இறுதிநிலை உற்பத்தி ஆ) மொத்த உற்பத்தி
இ) சராசரி உற்பத்தி ஈ) ஆண்டு உற்பத்தி

7) உற்பத்திக்கு ஏற்றாற் போல் மாறும் செலவு .............. செலவு எனப்படும்.
அ) பண ஆ) மாறும் இ) மொத்த ஈ) மாறா

8) ஒரு புத்தகம் ரூ. 10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார், எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்
அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 400

9) எப்போது நிறுவனம் இலாபம் பெற முடியும்?
அ) TR < TC ஆ) TR − MC இ) TR < TC ஈ) TR = TC

10) நிறைவுப் போட்டியில் நிறுவனத்தின் தேவைக்கோடு
அ) நிலையானது ஆ) படுகிடை இ) எதிர்மறை சரிவு ஈ) நேர்மறை சரிவு

11) தொன்மை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் யார்?
அ) ரிக்கார்டோ ஆ) கீன்ஸ் இ) மார்ஷல் ஈ) வாக்கர்

12) கடன்நிதி வட்டிக் கோட்பாடானது ...............
அ) தொன்மைக் கோட்பாடு ஆ) நவீன கோட்பாடு
இ) மரபுக் கோட்பாடு ஈ) புதிய தொன்மைக் கோட்பாடு

13) கர்நாடகத்தின் முக்கிய தங்கச் சுரங்கப் பகுதி ...............
அ) கோலார் ஆ) இராமகிரி இ) அனந்தபூர் ஈ) கொச்சின்

14) மக்கள் தொகை அடர்த்தி என்பது
அ) நிலத்தின் அளவு / மக்கள் தொகை ஆ) நிலத்தின் அளவு / வேலைவாய்ப்பு
இ) மக்கள் தொகை / குறிப்பிட்ட நில அளவு ஈ) மக்கள் தொகை / வேலைவாய்ப்பு

15) 1956ன் தொழிற்கொள்கையின் நோக்கம்
அ) பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது
ஆ) வேளாண்துறையை மட்டும் முன்னேற்றுவது
இ) தனியார் துறையை மட்டும் முன்னேற்றுவது
ஈ) குடிசைத் தொழில்களை மட்டும் முன்னேற்றுவது

16) பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கிய நோக்கம்
அ) விரைவான மற்றும் அதிகமான ஒருங்கிணைந்த வளர்ச்சி
ஆ) சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி
இ) சோசலிச முறையிலான சமூகம்
ஈ) விரைவான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி

17) புதிய பொருளாதாரக் கொள்கை கீழ்க்கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது?
அ) வெளிநாட்டு முதலீடு ஆ) வெளிநாட்டு தொழில்நுட்பம்
இ) வெளிநாட்டு வர்த்தகம் ஈ) இவை அனைத்தும்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18) MUDRA வங்கி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக.
அ) 2000 ஆ) 2005 இ) 2010 ஈ) 2015

19) எந்த யூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் அதிகமாகவுள்ளது?
அ) சண்டிகா் ஆ) பாண்டிச்சேரி
இ) இலட்சத்தீவு ஈ) அந்தமான் நிக்கோபா் தீவுகள்

20) $X^n$ என்பதன் வகையீட்டுக்கெழு ..............
அ) $nx^{(n-1)}$ ஆ) $nx^{(n+1)}$ இ) பூஜ்யம் ஈ) ஒன்று

பகுதி - ஆ

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 7×2=14
**வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) விலைத்தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.
22) உற்பத்தியாளா் சமநிலையை அடைய நிபந்தனை யாது?
23) மாறாச் செலவு என்றால் என்ன?
24) அங்காடி வரையறு.
25) பகிா்வு என்றால் என்ன?
26) முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளை கூறுக.
27) மனித மேம்பாட்டுக் குறியீட்டெண் (HDI) மற்றும் வாழ்க்கைத் தரக்குறியீட்டெண் (PQLI) ஆகியவற்றை வேறுபடுத்துக.
28) தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் எவை?
29) தனியாா் மயமாக்கல் என்றால் என்ன?
30) 62 = 34+4x என்றால் 'x' இன் மதிப்பு காண்க. (தீா்வு x = 7)

பகுதி - இ

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 7×3=21
**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடு என்ன?
32) மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலை பயன்பாட்டிற்கும் உள்ள உறவை விளக்குக.
33) காப்-டக்லஸ் உற்பத்தி சாா்பை விளக்குக.
34) இறுதிநிலை வருவாய் - குறிப்பு வரைக.
35) விற்பனைச் செலவு என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.
36) இயங்கு நிலை இலாபக் கோட்பாட்டை விளக்குக.
37) கிராம சா்வோதயம் - சிறுகுறிப்பு வரைக.
38) வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
39) தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி.
40) SHGயின் பண்புகளைக் கூறுக.

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 7×5=35

41) அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
**(அல்லது)**
ஆ) தேவை விதியினை விவரமாக எழுதுக.

42) அ) குறைந்து செல் பயன்பாட்டு விதியின் படம் வரைந்து விளக்கம் தருக.
**(அல்லது)**
ஆ) மாறும் விதம் விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக.

43) அ) குறுகிய கால செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரி.
**(அல்லது)**
ஆ) பல்வேறுபட்ட விலையில் AR மற்றும் MR கோடுகளிடையே உள்ள உறவுகளை விளக்குக.

44) அ) முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி அளவைத் தீா்மானிப்பதை விளக்குக.
**(அல்லது)**
ஆ) ரிக்காா்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.

45) அ) காந்தியப் பொருளாதாரக் கருத்துக்களை சுருக்கமாக எழுதுக.
**(அல்லது)**
ஆ) ஆங்கிலேயா் ஆட்சிக்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் பற்றி விவாதிக்க.

46) அ) சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக.
**(அல்லது)**
ஆ) ஊரக பொருளாதார பிரச்சனைகளை ஆராய்க.

47) அ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.
**(அல்லது)**
ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com